உறுப்பினரிடமிருந்து அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) அவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட 10 சாலைகளில் ஒன்ருன திருப்பூர் நகராட்சி எல்லையிலிருந்து அங்கேரிபாளையம் வழியாக செட்டிபாளையம் வரை செல்லும் சாலையை நெடுஞ்சாலைத் துறை, 1972-73 முதல் பராமரிப்புக்காக மேற்கொள்ளுமாறு அரசு ஆணையிட்டுள்ளது. மற்றும் உடுமலை-திருப்பூர் பாதையிலிருந்து வீரபாண்டி வரை செல்லும் சாலையை 'கிராமச்சாலைகள்' சிறப்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இதர சாலைகளை அரசு மேற்கொள்வது குறித்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் பரிந்துரைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

சுக்கிரப்பட்டி-ஆனந்தூர் சாலையில் பாலங்கள்.

*429 வினு—**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு பொறுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், சுக்கிரப்பட்டி-ஆனந்தூர் சாலை யில் கட்டப்பட வேண்டிய பாலங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ஒப்பளிப்பு வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. மலைக்கண்ணன் : இந்தச் சாலை 1962-இல் அரசாங்கத் தால் எடுத்துக்கொள்ளப்பட்டு, அன்றிலிருந்து பஸ் போகிறது ஆயினும் இடையில் பாலங்கள் கட்டப்படாததாலும், ரோடு மெட்டலிட்டு தார் போடப்படாததாலும் மழைக்காலங்களில் பஸ் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. ஆகவே ஐந்தாண்டுத் திட்டத்தில் 1974-75-க்குள்ளாகவாவது இந்தச் சாலை செப்பனிட்டுத் தரப்படுமா ?

1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பது என்றால் நிதிநிலைமை யோசித்துத்தான் சேர்க்கப்பட வேண்டும்.

ஆலங்குளத்திலுள்ள சிமிட்டி தொழிற்சாலை.

*430 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையை மேலும் விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தொழிற்சாலையின் திறன் தற்போதுள்ள ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னிலிருந்து ஆண்டொன்றுக்கு 7 இலட்சம் டன்னுக்கு அதிகரிக்கப்படும். விரிவுபடுத்துவதற்கான மொத்தச் செலவு ரூ. 1,475 இலட்சமாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஆலங்குளம் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதன் மூலம் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்? அந்தப் பணி எப்போது துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சுமார் ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆலங்குளம் தொழிற்சாலை விரிவு படுத்தப்பட்ட பிறகு, இதனுடைய கப்பாசிடி மற்ற ஏ.சி.சி. தொழிற்சாலைகளின் கப்பாசிடியைவிட அதிகமாக இருக்குமா? எது பெரிய ஆலையாக இருக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மற்ற ஆலைகளைப்பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இங்கே ஆண்டு ஒன்றுக்கு 4 லட்சம் டன் உற்பத்தி செய்கிற கப்பாசிடிதான் இப்போது இருக்கிறது. இதை 7 லட்சம் டன் உற்பத்தி செய்கிற அளவுக்கு விரிவு படுத்தும் திட்டம்தான் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.